★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85680

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

பழிவாங்குகிறார்கள்!

★

புதுடில்லி, ஆக 31—

இவ்வாண்டு துவக்க முதல்—ஜனவரி திங்கள் தொட்டு இதுவரை, சட்டவிரோதமான வேலைநிறுத்தங்களில் ஈடுபட்டதற்காக 313 இரயில்வே ஊழியர்கள் வேலையிலிருந்து சிறிது காலத்திற்கு நீக்கிவைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மாநிலங்கள் சபையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மலர் 4] சென்னை: ஆவணி 17உ சனி (1-9-56) ★ ★ வெளியீடு: ஆவணி 18உ ஞாயிறு (2-9-56) [இதழ் 71

'ரஷ்ய உதவி அறிவிப்பு வெறும் செய்தியாகிவிட்டதா?'

'திங்கள் எட்டு ஆகியும் இந்தியப் பேரரசு வாய்மூடிக்கிடப்பதேன்?'

'காமராசர் ஆட்சி வாய்ப்பைப் பயன்படுத்தாதிருப்பது முறையா?'

ஈ. வெ. கி. சம்பத் தரும் தகவல்

சோவியத் பிரதமர் புல்கானினும் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் குருஷேவும், இந்தியத் துணைக்கண்டத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு இரஷ்யா திரும்பின சில நாட்களுக்கெல்லாம், பின்வரும் உதவி தரும் அறிக்கை வெளிவந்திருக்கிறது; அந்த அறிக்கையை இன்றுவரை இந்தியப் பேரரசு மறுக்கவில்லை.

'சேலத்தில் அலுமினியம் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு சோவியத் அரசாங்கம் தர அறிவித்திருந்த உதவியை தான் ஏற்றுக்கொண்டதா—இல்லையா? ஏற்றுக்கொள்ள மறுத்திருந்தால் அதற்கு நியாயமான சமாதானம் என்ன?—என்பது பற்றி எல்லாம் இந்தியப் பேரரசு, இதுவரை மூச்சுப்பேச்சு இல்லாமல் இருந்துவருகிறது.

'தொழில் துறையில் தென்னிந்தியா பின்தங்கிக் கிடக்கிறது என்ற உண்மை இரஷ்யத் தலைவர்களாலும் நன்கு உணரப்பட்டிருக்கிறது என்பது, அவ்வறிக்கையின் தனிச் சிறப்பாகும்.

இவ்வறிக்கையின் உள்ளடக்கம் குறித்தும், அவ்வறிக்கையில் காணப்படும் இரஷ்ய உதவியை ஏற்கவும்—மறுக்கவும் செய்யாது வாயடைத்து இருந்துவரும் இந்தியப் பேரரசினுடையவும், சென்னை ஆட்சியினுடையவும் நாணயமற்ற—நேர்மையற்ற போக்கை நான், பற்பல கூட்டங்களில் எடுத்துக் காட்டிக் கண்டித்துள்ளேன்.

நான் பேசிவருவதின் உண்மையைத் தாங்களும் ஆதாரத்துடன் தெரிந்திருக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் பலரும், ஏதோ நானாகக் கற்பனை செய்துகொண்டு அவ்வாறு பேசி வருகிறேன் என்ற சந்தேகத்தில் சிலரும், இரஷ்ய உதவி பற்றிய அறிக்கையைப் பிரசுரிக்கும்படி கோரி, எழுதி வருகின்றனர் தனித்தனியாகக் கடிதம் எழுதி உண்மையை எடுத்துக்காட்ட இயலாத அளவில், கோரிக்கைக் கடிதங்கள் என்னிடம் குவிந்து கிடக்கின்றன.

கோரினவர்கள் உண்மை அறியவும், இரண்டிலும் சேராது இருக்கும் பெரும்பான்மையினர் விஷய விளக்கம் பெறவும் 'மெயில்' இதழில் வந்த இரஷ்ய உதவிச் செய்தியை ஆங்கிலத்திலும், தமிழிலும் இதன்கீழ் தந்திருக்கிறேன். கழகத் தோழர்களும், மற்ற பொதுமக்களும் உண்மையை உணர்ந்து, இந்தியப் பேரரசின் ஒரவஞ்சனையையும், கனம் காமராசர் ஆட்சியின் அலட்சிய புத்தியையும் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் தெரிந்துகொள்ள வேண்டுகிறேன்.

அன்பன்

ஈ. வெ. கி. சம்பத்

நெய்வேலித் திட்டத்திற்குத் தொழில் நுட்ப உதவி

தருவதற்கு மேற்கு ஜெர்மனி தயாராக உள்ளதாம்

சென்னை, ஆக 31—

"நெய்வேலித் திட்டம் போன்ற பழுப்பு நிலக்கரிச் சுரங்கத் திட்டங்கள் சம்பந்தமாகத் தொழில் நுட்ப உதவி வேண்டுமென்று இந்தியா கோரினால், அந்த உதவியை முடிந்த அளவுக்குத் தருவதற்கு மேற்கு ஜெர்மனி தயாராக இருக்கிறது," என்று, மேற்கு ஜெர்மனி அதிகாரி ஒருவர் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

"இந்தியாவில் இயற்கை வளம் நிரம்பியுள்ளது; திறமைமிக்க தொழிலாளர்களும் அதிகம் இருக்கின்றனர்; தகுந்தவாறு அவர்கள் பயன்படுத்திக் கொள்ளப்பட்டால், இந்தியா தொழில்துறை சுபீட்சத்தை நோக்கி முன்னேறுவதில் சிரமம் இருக்காது" என்றும் அவர் கூறியுள்ளார்.

★

'தொழில் துறையில் தென்னிந்தியா பின்தங்கிக் கிடக்கிறது'

'சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை நிறுவ கடனும் தொழில்துறை உதவியும் தருகிறோம்'

(From Our Correspondent)

New Delhi, Jan. 20—

The Russians have offered to help S. India to build an Aluminium Plant and also establish a new Hydro-Electric Plant, it is learnt here tonight.

The Russian offer which has been communicated to the Union Government, it is stated, is likely to be accepted.

The proposal is to set up the Aluminium Plant in the vicinity of Salem where 10 million tons of high-grade bauxite is said to be available.

The Hydro-Electric Project will come as part of the Machkund Power Project in Andhra. One estimate of the Russian investment proposed here is Rs. 10 crores.

The Soviet Govt. is understood to have offered both technical help and money in the form of long-term loans for the immediate execution of thesc projects.

The Russian help is said to be a part of the Soviet programme to offer help where it is most needed.

The Russians are understood to have felt the Southern region is 'industrially backward and accordingly must get a high priority in their scheme of assistance.

—'The Mail': 21-1-56

(நமது நிருபர்)

புதுடில்லி, ஜன. 20—

தென்னிந்தியாவில் ஒரு அலுமினியம் தொழிற்சாலையை நிறுவவும், ஒரு நீர் மின்சார உற்பத்தித் திட்டத்தை நிர்மாணிக்கவும் உதவிதர இரஷ்யர்கள் அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

யூனியன் அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள இரஷ்ய உதவி, பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

சேலம் அருகில் அலுமினியம் தொழிற்சாலையை நிர்மாணிப்பதே ஏற்பாடு; அங்குதான் 100 இலட்சம் டன் உயர்தரமான பாக்சைட் கிடைக்குமெனச் சொல்லப்படுகிறது.

ஆந்திராவில் உள்ள மச்குண்ட் மின்சாரத் திட்டத்தின் ஒரு பகுதியாகவே நீர் மின்சார உற்பத்தி ஏற்பாடு இருக்கக்கூடும். இத்துறையில் இரஷ்ய முதலீடு 10 கோடி ரூபாயாகும்.

இவ்விரு திட்டங்களையும் உடனடியாக நிறைவேற்றுவதற்காக, நீண்ட நாள் தவணைக் கடனைப் பணமும் தொழில் துறை உதவியும் தர, சோவியத் அரசாங்கம் அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

சர்வதேசியம் பேசுவோர் போக்கு

'பம்பாய் எங்கிருந்தால்தான் என்ன என்ற எண்ணம் மராட்டியருக்கு ஏன் வரவில்லை?'

''பாரதம்' ஒரே நாடு என்பதைக் காட்டுவதாகுமா இது?'

மக்களுக்குக் கருத்து விளக்கம் தரும் முறை குறித்து

அண்ணா விளக்கம்

"'பாரதம் ஒரே நாடு; அதனைத் துண்டாடவேண்டும் என்று சொல்லுகிற பிரிவினைச் சக்திகள் இவர்கள்; இவர்களை வாழவிடக்கூடாது' என்றெல்லாம் கூறிவந்தனர், காங்கிரசாரும் இதாரும்! அவர்கள், 'பாரதம் ஒரே நாடு' என்று இத்தனை நாளாக ஒரு பெரும் பொய்யைச் சொல்லிவந்தார்கள் என்ற உண்மையை, மக்கள் இப்போது தெளிவாகத் தெரிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

"காங்கிரசிற்கு மூலதாரமான கோட்டை—காங்கிரசின் கொலுமண்டபம் என்றெல்லாம் வருணிக்கிறார்களே, அந்தப் பகுதிகளில் எல்லாம் இன்று, பெரும் கொந்தளிப்புகளைக் காண்கிறோம்.

"பம்பாய் எங்கே இருந்தால் என்ன? மராட்டியத்துடன் இருந்தால் என்ன, குசராத்துடன் இருந்தால் என்ன!—என்ற

(4-ம் பக்கம் பார்க்க)

கிழக்கு பாகிஸ்தானில் குடியரசுத் தலைவர் ஆட்சி

கராச்சி, ஆக. 31—

கிழக்கு பாகிஸ்தான் சட்டசபையைத் தற்காலிகமாக ஒத்திவைத்துவிட்டுத் தனது நேரடி ஆட்சியை பாகிஸ்தான் குடியரசுத் தலைவர் இஸ்கந்தர் மீர்சா பிரகடனப் படுத்தியுள்ளார்.

எத்தனை நாளைக்கு சட்டசபை கூடாமல் வைத்திருக்கப்படும் என்பதோ யார் மந்திரிசபை அமைக்குமாறு கோரப்படுவார்கள் என்பதோ இன்னும் தெரியவில்லை.

ஐக்கிய முன்னணிக் கட்சியைச் சேர்ந்த முதன் மந்திரியான அபு உசேன் சர்க்கார், சட்டசபையில் தனக்கு மெஜாரிட்டி பலம் இல்லாததால் இராஜினாமாச் செய்திருக்கிறார்.

இதற்கிடையில் கிழக்கு பாகிஸ்தானில் உள்ள அவாமி லீகினர், தங்களை சர்க்கார் அமைக்குமாறு கோரவேண்டும் என்று கோரியுள்ளனராம்.

நம் நாடு

சென்னை 1—9—'56 சனி

காங்கிரஸ் விலாங்கு!

"இந்த ஆண்டில் 3,000 விசைத் தறிகளும் அடுத்த ஆண்டில் 3,000 விசைத் தறிகளும் புகுத்துவது என அரசாங்கம் முடிவிற்கு வந்திருக்கிறது. இவ்வாறு விசைத் தறிகளைப் புகுத்துவதானது, கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கு உதவுவது என்ற அரசாங்கத்தின் கோள்கைக்கு முரண்பாடானது அல்ல."

"கைத்தறிப் புள்ளிவிவரப் படியும்கூட, மாகாணத்தில் இருந்துவரும் 5-லிருந்து 6-இலட்சம் கைத்தறிகளில் 1·57 இலட்சம் தறிகள் மட்டுந்தான் கூட்டுறவு அமைப்புக்குள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. எனவே, 6,000 கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றி அமைப்பதினால், கைத்தறிகளோ, நெசவாளர்களோ பெரும் கேட்டிற்கு உள்ளாகமாட்டார்கள்."

"சில கைத்தறிகளை விசைத் தறிகளாக மாற்றி அமைப்பது என்ற இந்தியப் பேரரசின் ஏற்பாட்டை சென்னை அரசாங்கம் எதிர்க்கவில்லை."

ஆகஸ்டு பதின்மூன்றுந்தேதி நடைபெற்ற சென்னை சட்ட சபை கேள்வி நேரத்தில், தொழில்—விவசாய அமைச்சராக இருந்துவரும் கனம் பக்தவத்சலனார், மேற்குறித்துள்ளபடி, உறுப்பினர்கள் எழுப்பிய சரமாரியான வினாக்களுக்கு விடையளித்திருக்கிறார்.

இவ்விடைகளில் இருந்து வெளியாகும் உண்மைகள் என்ன?

கைத்தறிகளில் சிலவற்றை விசைத்தறிகளாக மாற்றி அமைப்பது என்ற இந்தியப் பேரரசின் முடிவை சென்னை அரசாங்கம் ஆதரிக்கின்றது. ஆதரிப்பதுடன், இம்மாகாணத்திலுள்ள கைத்தறிகளில் 6,000 கைத்தறிகளை விசைத்தறிகளாக, இன்று முதல் இரண்டாண்டுக் காலத்திற்குள்ளாக மாற்றி அமைக்க சென்னை அரசாங்கம் முடிவுகட்டி இருக்கிறது என்பதுமாகும்.

அதுவுமன்றி, அரசாங்க நிலையில் இந்தியப் பேரரசின் விசைத்தறி அமைப்புக் கருத்தையோ, செயல் முறையையோ சென்னை அரசாங்கம் எதிர்க்கவில்லை என்பதுடன், முழுமனதுடன் ஒப்புக்கொண்டும் இருக்கிறது என்ற உண்மை தெளிவாகத் தெரிகிறது.

விசைத்தறி புகுத்தும் ஏற்பாட்டில் இந்தியப் பேரரசின் போக்கிற்கும் சென்னை அரசாங்கப் போக்கிற்கும் அடிப்படையில் எந்தவிதக் கருத்து மாறுபாடும் இல்லை என்பது விளக்கமாகத் தெரிவதுடன், விசைத்தறித் திணிப்பினால், கைத்தறிகளுக்கும் நெசவாளர்களுக்கும் தீமை ஏற்படும் என்பதும் அமைச்சர் தந்துள்ள பதில் மூலம் உறுதியாகிறது.

அவ்வாறு ஏற்படும் கேடு பெரிதாக இருக்குமா சிறிதாக இருக்குமா என்பதில் அமைச்சர் குறிப்பிடும் கூற்று, அதாவது விசைத்தறித் திணிப்பால் பெருந்தீமை ஏற்படாது என்றக் கருத்து, அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாத விவாதத்திற்குரிய கருத்தாக இருக்கலாம். ஆனால், விசைத்தறி ஏற்பாட்டினால் கைத்தறிகளுக்கு ஏற்படக் கூடியது தீமையே என்பதை அமைச்சர் பக்தவத்சலனார் அவர்கள், சென்னை சட்ட சபையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ளார் என்பதை அவராலும்கூட இப்பொழுது மறுத்துவிட முடியாது. எனவே, விசைத்தறியினால் கைத்தறிகளுக்கு ஏற்பட இருப்பது தீமையே என்ற உண்மையை அமைச்சர் அவர்களும் ஒப்புக்கொண்டுள்ளார் என நாம் கொள்வதில் தவறு எதுவும் இருப்பதற்கில்லை. நிற்க,

கைத்தறிகளுக்கும் நெசவாளர்களுக்கும் எவ்வகையிலும், மந்திரியின் கூற்றுப்படி, பெருங்கேட்டினை உண்டாக்காத விசைத்தறித் திணிப்பு ஏற்பாட்டை மேற்கொண்டு இருக்கிற சென்னை அரசாங்கம்—இவ்வாண்டு முதல் இரண்டாண்டு காலத்தில், ஆண்டு ஒன்றுக்கு மூவாயிரம் விசைத்தறிகள் வீதம் ஆறாயிரம் விசைத்தறிகளைத் திணிக்கத் திட்டமிட்டிருக்கின்ற சென்னை அரசாங்கம், எவ்வாறு நடந்துகொள்ளுகிறது — எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது ஆராய்ந்து அறியத்தக்கது.

குறிப்பிட்ட ஒரு கொள்கைக்குப் பொது மக்களிடமிருந்து பலமான எதிர்ப்புக் கிளம்புமானால், அதை மதித்து, ஆளும் கட்சியினர், தாங்கள் செயலாற்ற இருந்த ஏற்பாட்டைக் கைவிட்டுவிடுவது சனநாயக ரீதியான உயர்ந்த கோட்பாடாகும். மக்கள் எதிர்ப்பை மதித்து நடக்க மறுத்துத் தங்கள் கருத்துப்படி மேற்கொண்ட முடிவைச் செயலாற்ற ஆட்சியினர் பிடிவாதமாக நடந்துகொள்ள முற்படுவது, சனநாயக முறைக்கு மாறுபட்டிருப்பதாலும், அக்கருத்தைக் கொண்டிருப்பவர்களின் கொள்கைப் பற்றுக்கு உடன்பாடு உடைய செயலாகக் கருதப்படும்.

மக்கள் எதிர்ப்பை மதித்து சனநாயக ரீதியாக நடந்துகொள்ள சென்னை ஆட்சியாளர்கள் முன்வரவில்லை; பிடிவாதமான கொள்கைப்பற்று தங்களுக்கு இருக்கிறது என்பதை மெய்ப்பிக்கும் வகையிலும் சென்னை ஆட்சியாளர்கள் செயல்பட முனையவில்லை.

வரவிருக்கும் பொதுத் தேர்தலை மனதில்கொண்டு அரசியல் நாடகமாடும் தேர்ந்த அரசியல் சந்தர்ப்பவாதிகளாகவே சென்னை காங்கிரஸ் ஆட்சியாளர்கள் நடந்துகொள்ள முன்வந்திருக்கின்றனர். இம்முடிவை எவரும் கொள்ளக்கூடிய வகையில்தான், பவானியில் கூடிய தமிழ் நாடு காங்கிரஸ் குழுவில் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படும் விசைத்தறி ஏற்பாடு பற்றிய தீர்மானம் அமைந்திருக்கிறது. அதிலும் விசைத்தறித் திணிப்பை ஆதரித்து சட்டசபையில் முழக்கமிட்ட தொழில் — விவசாய அமைச்சர் பக்தவத்சலனாரும், அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தும், விசைத்தறிக்கு எதிர்ப்பாக அக்கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருப்பதுதான் காங்கிரஸ் கட்சியினரின் அரசியல் சந்தர்ப்பவாதத்திற்கு மணிமகுடம் புனைந்ததுபோல் இருக்கிறது.

விசைத்தறி புகுத்தும் ஏற்பாட்டை ஆதரித்து சட்டசபையில் முழங்கிய அமைச்சர், தமிழ்நாடு காங்கிரஸ்குழுக் கூட்டத்தில் அத்திட்டத்திற்கு எதிராகப் பேசினவர்களுக்குத் திருப்தி ஏற்படும்வகையில்பதில் தந்திருக்க வேண்டும். ஆனால் அவர் பதில் தந்தாரோ அல்லது எதிர்ப்பாளர்களுடன் சேர்ந்துகொண்டு அவரும் விசைத்தறி ஏற்பாட்டை எதிர்த்துப் பேசினாரோ யார் கண்டார்கள். அமைச்சரின் குணச் சிறப்பை அறிந்திருப்பவர்கள், எதிர்ப்பை எதிர்த்து அவர் பேசி இருப்பார் என்பதை நம்பமாட்டார்கள்.

"நெசவாளர்கள் பலரும் அதை எதிர்க்கிறார்கள்; எனவே, விசைத்தறித் திணிப்பைக் கைவிடும்படி அகில இந்திய காங்கிரஸ் குழுவைக் கேட்டுக்கொள்ள வேண்டும்" என்ற முறையில்தான், அக்கூட்டத்தில் பேசினவர்களின் வாதம் இருந்திருக்கிறது.

இராசகோபாலாச்சாரியார் அவர்களின் மறைமுக ஆதரவில் நடைபெற்றுவரும் 'கல்கி' இதழ், 12—8—56-ல், விசைத்தறி ஏற்பாட்டிற்கு எதிராக நியாயம் பேசி இருக்கிறது. அந்த நியாயத்தின் இறுதியில் பின்வரும் கோரிக்கையையும் வெளியிட்டிருக்கிறது:—

"பொதுத் தேர்தல் வரப்போகும் இச்சமயத்தில் கைத்தறிக்காரர்களை முற்றிலும் விரோதித்துக்கொள்வது இராசதந்திரம் ஆகாது."

நாடாளும் கட்சியாகக் காங்கிரஸ் இருந்துகொண்டு, விசைத்தறித் திணிப்புக்குத் திட்டமிடுகிறது. அத்திட்டத்தை ஆதரித்து அதன் அமைச்சர்கள் சட்டசபையில் முழக்கமிடவும் செய்கின்றனர்.

அதே நேரத்தில், சாதாரண காங்கிரஸ் கட்சியினராகக்கூடி, தாங்களே ஆட்சிப் பொறுப்பிலிருந்து மேற்கொண்டுள்ள திட்டத்தை, எதிர்க்கின்றனர் —எதிர்ப்பைத் தீர்மானமாகவும் உருவாக்கி மகிழ்கின்றனர்!

இது என்ன அரசியல்முறை? நம்மைப்போன்ற சாமானியர்களுக்குப் புரியாதமுறை போலும்!

விசைத்தறித் திணிப்பைப் பொறுத்தவரையிலாவது 'கல்கி' இதழின் இராசதந்திரப் போதனையைக் கனம் காமராசர் கும்பல் ஒப்புக்கொண்டு செயல்பட முனைந்திருப்பது கண்டு ஆச்சாரியார் உள்ளம் பூரிப்பார். ஆனால் கைத்தறியாளர்கள் காங்கிரஸ் கட்சியினரின் ஏய்க்கும் வித்தையை என்றென்றும் மறந்துவிடமாட்டார்கள் என்பது திண்ணம்.

கலைக்கப்படாதாம்

"வங்காளம் போன்ற இடங்களில் முன்பு நடைபெற்றதுபோல், பாங்கிகள் எதுவும் இனிமேல் கலைக்கப்பட்டதாக நாம் கேள்வியுறப் போவதில்லை"

என்று, ரெவினியூ அமைச்சர் ஏ. சி. குகா கூறினராம்.

வாய்ச் சொல் வீரர்கள்!

இரண்டு வாரத்திற்குள் அரிசிவிலை இறங்கிவிடுமாம்

மத்திய மந்திரி மீண்டும் கூறுகிறார்

புதுடில்லி, ஆக. 30—

"இன்னும் இரண்டு வாரங்களில் தானியங்களின் விலைவாசிகள் கணிசமான அளவில் வீழ்ச்சியடையலாம். தானியங்களைப் பதுக்கி வைத்துக்கொண்டிருப்பவர்கள், அவதியுறப் போகிறார்கள்"

என்று, டில்லி மாநிலங்கள் சபையில் பேசும்போது மத்திய உணவு—விவசாய அமைச்சர் அஜீத் பிரசாத் ஜெயின் கூறியிருக்கிறார்.

"உணவு நிலைமை சம்பந்தப்பட்டவரை, நாம், நிச்சயமாக நிலைமையைச் சமாளித்துவிட்டோம். நேர்மைக் குறைவாக நடந்துகொண்ட வர்த்தகர்களை முறியடிக்கக்கூடிய நிலைமையை நாம் ஏற்கனவே அடைந்துவிட்டோம்"

என்றும் அவர் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்!

ஏற்கனவே சர்க்கார் 5000-க்கு மேற்பட்ட நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தியிருக்கின்றனர் என்றும், மேலும் அவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

கிடங்குகளிலுள்ள கையிருப்புப் பொருட்கள், இறக்குமதிக்குச் செய்துள்ள ஏற்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில், இந்த நடைமுறை ஆண்டில் மட்டுமின்றி, எதிர்காலத்திலும்கூட ஏற்படக்கூடிய எவ்வித நெருக்கடியையும் சமாளிக்கக்கூடிய நிலையில் நாம் இருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

மேலும் அவர் பேசியிருப்பதாவது:—

"உணவு உற்பத்தியின் இலட்சிய அளவுகளை அதிகப்படுத்துவது குறித்து உணவிலாகா, திட்டக் குழுவுடன் விவாதித்து வருகிறது. பின்னர் இதுபற்றி மாநில சர்க்கார்களுடன் கலந்தாலோசிக்கப்படும். இவ்வாலோசனை வருகிற செப்டம்பர் ஆரம்பத்தில் நடைபெறலாம். மேலும் சுமார் 60 இலட்சம் டன் உணவுத்தானிய இறக்குமதிக்குத் திட்டத்தில் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. பர்மாவுடன், 20 இலட்சம் டன் அரிசி இறக்குமதிக்கு ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. சீனாவிலிருந்து 60,000 டன் அரிசி வரும். அமெரிக்காவிலிருந்து 2 இலட்சம் டன் அரிசி கிடைக்கும். மேலும் உதவித் திட்டப்படி, அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து சுமார் 10 இலட்சம் டன் கோதுமை இறக்குமதிக்கும் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மேலும், அடுத்த மூன்று ஆண்டுகளில் 35 இலட்சம் டன் கோதுமை இறக்குமதிக்கும் மற்றொரு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

"நீண்ட காலப் பரிகாரம் சம்பந்தப்பட்டவரை, உற்பத்திப் பெருக்கில் வேகத்தை அதிகரிக்கச் செய்யவேண்டுமென்பதில் மற்றவர்களுக்கிருப்பதைப் போல எனக்கும் அக்கரை இருக்கிறது."

22 சிமெண்டு ஆலைகள் துவங்கப்படுமாம்

புதுடில்லி, ஆக. 30—

இந்தியாவில் புதிதாக 22 சிமெண்டு ஆலைகள் ஏற்படுத்துவதற்கான லைசென்சுகள் வழங்கப்பட்டிருக்கின்றனவாம்.

மேலும், அயல் நாடுகளிலிருந்து 2,11 000 டன் சிமெண்டுஇறக்குமதி செய்ய ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்றும், இதர 50,000 டன் சிமெண்டு ஏற்கனவே வந்து சேர்ந்துவிட்டதென்றும் அமைச்சர் எம். எம். ஷா மாநிலங்கள் சபையில் அறிவித்திருக்கிறார்.

மேற்கொண்டும் $4\frac{1}{2}$ இலட்சம் டன் சிமெண்டு இறக்குமதி செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகிறதென்ற தகவலையும் அவர் வெளியிட்டிருக்கிறார்.

பெண்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு பயிற்சி

சென்னை, ஆக. 31—

பள்ளிப் பாடத் திட்டத்தின்கீழ், உயர்தரப் பள்ளி வகுப்புக் கூட்டத்தில் படிக்கும் பெண்களுக்குக் குடும்ப நிர்வாகப் பயிற்சி தருவது பற்றி மத்திய சர்க்கார் ஆழ்ந்த அக்கரையுடன் ஆலோசித்து வருகின்றனராம்.

இத்திட்டத்தை மத்திய சர்க்கார், மாநில சர்க்கார்களின் பரிசீலனைக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும், இதில், அவசியமான திருத்தங்களை மாநில சர்க்கார்கள் செய்து கொள்ளலாமென்றும், மேற்படி திட்டம் குறித்தத் தகவலை வெளியிட்ட மத்தியக் கல்வி இலாகா துணை ஆலோசகர் டாக்டர் ஆர். கே. பான் தெரிவித்திருக்கிறார்.

நமது பெண்கள் மேனாட்டு முறைகளைப் பின்பற்றுவது விரும்பத்தக்கதல்ல என்றும், நமது சொந்த வாழ்க்கை முறையில் அவர்கள் பயிற்சி பெற்றுக் குடும்பத்தை நிர்வகிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

'ஒரு நீக்ரோவாக நான் இருந்தால்?'

அமெரிக்க இலக்கியக் கர்த்தா கருத்து

நியூயார்க், ஆக. 30—

"நீக்ரோக்கள் நடத்தி வருகின்ற போராட்டங்களுக்குக் காந்திய மார்க்கமே சிறந்தது" என்று, அமெரிக்க இலக்கியக் கர்த்தாவான வில்லியம் பாக்னர் என்பார் நீக்ரோ மக்களுக்குச் சிபாரிசு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

"நான் ஒரு நீக்ரோவாக இருந்தால், நம்பிக்கையுடனும் மனஉறுதியுடனும் ஆனால், அதேநேரத்தில் காலம்—இடம்—சூழ்நிலைகள் ஆகியவற்றிற்கு ஏற்ப வளைந்து கொடுக்கும் வகையில் குடியுரிமைப் போராட்டத்தை நடத்தும்படி எனது தலைவர்களுக்கும் முதியோருக்கும் யோசனை கூறுவேன்; இதுவே 'காந்திய' மார்க்கமாகும்.

"நான் ஒரு நீக்ரோவாக இருந்திருந்தால், அவர்களுக்கான தேசிய சங்கத்தில் உறுப்பினர் ஆகியிருப்பேன்; ஆனால், 'வளைந்து கொடுக்கும் தன்மையுடன் இருக்கவேண்டும்' என்ற நிபந்தனையுடன்தான் இருப்பேன். பொறுமை நமது ஆயுதமாக இருக்கவேண்டும்" என்றும் அவர் எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

செயற்கைக் கிரகங்கள் வேலை முன்னேற்றம்

டெட்ராய்ட்—

அடுத்த வருடமோ, 1958-ம் ஆண்டின் துவக்கத்திலோ அமெரிக்கா அனுப்பப்போகிற செயற்கை கிரகங்களுக்கு, கோள வடிவமான பொருட்களில் இங்குள்ள ஒரு கிறுவனம் வேலை தொடங்கியுள்ளது. பரிசீலனைக்காகக் கருவிகள் அடங்கிய சுமார் 15 அல்லது 20 பிரிவுகள் கட்டப்படும்; சுமார் 4 பவுண்டு எடையுள்ள 20 அங்குலப் பிரிவுகள் மக்னீசியமும், சிறிய அளவு துத்தநாகமும் அலுமினியமும் கலந்த எடை குறைந்த—பலம் பொருந்திய கூட்டுஉலோகத்தினால் அது தயாரிக்கப்படும்,

‘தஞ்சாவூர் பொம்மை’ உற்பத்தி செய்யத் தொழிற்சாலை தேவையாம்!

டில்லி கனரகத் தொழில் இலாகா மந்திரியிடம் கோரிக்கை

மக்கள் சபையில் உள்ள தென்னாட்டுப் பிரதிநிதிகளின் இலட்சணம்

புதுடில்லி—

தென்னாட்டில் — குறிப்பாகச் சென்னை மாநிலத்தில் அதிகமான தொழிற்சாலைகளை நிறுவ வேண்டும் என்று முறையிடுவதற்காக சென்னையைச் சேர்ந்த சில காங்கிரஸ் மக்கள்சபை உறுப்பினர்கள், கனரகத் தொழில் இலாகா மந்திரி மனுபாய் எம். ஷா என்பாரைச் சந்தித்தனராம்.

அவர் சென்னைக்குச் சீக்கிரமே வந்து நிலைமைகளைக் கவனிப்பதாகக் கூறினாராம்.

தூது சென்ற உறுப்பினர்களில் ஒருவரான திருமதி நல்லமுத்து-ராமமூர்த்தி என்ற அம்மணி, மந்திரியிடம் என்ன முறையிட்டார் களாம் தெரியுமா?

“தஞ்சாவூர் பொம்மை செய்யும் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு, சென்னை சர்க்காருக்கு டில்லி சர்க்கார் உதவ வேண்டும்; இசைக் கருவிகள்—குறிப்பாக மிருதங்கம் உற்பத்தி செய்வதற்கும் உதவ வேண்டும்,”

என்று அவர் முறையிட்டுக்கொண்டாராம்.

இன்னொரு உறுப்பினர், தனது பகுதியில் வளர்ந்திருக்கும் தேவதாரு மரங்களிலிருந்து ‘குங்கிலியம்’ என்ற பிசின் தயாரிக்க ஒரு தொழிற்சாலை வேண்டுமென்று கேட்டாராம்!

இன்னொரு உறுப்பினர், ‘முத்துக் குளிக்கும் தொழிலை அபிவிருத்தி செய்ய டில்லி உதவ வேண்டும்’ என்று கேட்டாராம்.

இவர்கள் சந்தித்தது கனரகத் தொழில் இலாகா மந்திரியை! வேண்டுமென்று கேட்டதோ, தஞ்சாவூர் பொம்மை செய்யும் தொழிற்சாலை அமைக்க உதவி!

எப்படிப்பட்ட உறுப்பினர்கள் பார்த்தீர்களா? இவர்கள் எல்லாம் தென்னாட்டு மக்களின் பிரதிநிதிகள், மக்கள் சபையில்!

இந்தியா 90 கோடி ரூபாய் தருகிறதாம்!

புதுடில்லி, ஆக. 31—

ஒரு ஆண்டில் சுமார் ரூ. 90 கோடிவரையில் அந்நிய நாட்டுக் கப்பல் கம்பெனிகளுக்கு இந்தியா கட்டணமாகச் செலுத்திவருவதாக அமைச்சர் ஓ. வி. அளகேசன் மக்கள் சபையில் அறிவித்திருக்கிறார்.

வெளிநாட்டு வர்த்தகத்தில் பாதியாவது இந்தியக் கப்பல்கள் மூலம் நடைபெற வேண்டுமென்பதே சர்க்காரின் இறுதி இலட்சியம் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

முஸ்லிம்களும் ஓடி வருகின்றனராம்!

புதுடில்லி, ஆக. 30—

“கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்துக்கள் மட்டுமல்லாமல், முஸ்லிம்களும்கூட ஓடிவருகிறார்கள்”

என்ற தகவலை மாநிலங்கள் சபையில் தந்த பிரதமர் நேரு, ‘இவ்வாறு அவர்கள் வெளியேறுவதற்கான முக்கியக் காரணம் அங்குள்ள படுமோசமான பொருளாதாரமேயாகும்’ என்றும் குறிப்பிட்டிருக்கிறார்;

இலவச லைசென்ஸ்!

மேலப்பாளையம், ஆக. 30—

இவ்வாண்டில்—கடந்த ஏப்ரல் திங்கள் தொட்டு, இங்குள்ள சுருட்டு, சோப்பு செய்தல் போன்ற சிறு சிறு குடிசைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள ஏழைகளுக்கு இலவசமாக லைசென்சுகள் வழங்குவதென மேலப்பாளையம் நகராண்மைக் கழகம் முடிவு செய்திருக்கிறது!

இப்பகுதிகளில், வேறு சில குடிசைத் தொழில்களில் ஈடுபடுகின்ற கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி செய்வதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

‘படம் பார்க்கும் டெலிபோன்’!

நியூயார்க்—

டெலிபோனில் பேசுபவர்கள், டெலிவிஷன் திரையைப்போன்ற தோர் திரையில், ஒருவருக்கொருவர் பார்த்துக்கொள்ள வசதியளிக்கும் ஒரு ‘டெலிபோனை,’ விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பட டெலிபோனில் சாதாரண டெலிபோன் கம்பிகளும், மிகச் சிறிய சாதாரண புகைப்படக் கருவியும் உபயோகிக்கப்படுகிறது. 2-க்கு 3 அங்குலம் அளவில் ஒரு திரையும் இருக்கிறது. பல அடிகள் தூரத்திலிருந்தோ சமீபத்திலிருந்தோ இதனைத் தெளிவாகக் காணலாம்.

மேலும் அபிவிருத்தியும் விலை நிர்ணயமும் ஏற்பட்ட பிறகு, வீடுகளில் உபயோகப்படுத்த பொதுமக்களுக்கு இதனை அளிக்கக்கூடுமாம்.

‘அகில இந்தியா’க்களுக்கு அர்ப்பணம்!

புதுடில்லி, ஆக. 29—

‘காவேரி தீரத்தில் உள்ள எண்ணெய் ஊற்றுக்கள் குறித்த ஆராய்ச்சியை இப்போது மேற்கொள்ளுவதற்கு இல்லை’ என்று டில்லி சர்க்கார் கைவிரித்து விட்டதாகத் தெரிய வருகிறது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி இரண்டு ஆண்டுகளில்தான், காவேரிப் பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய எண்ணெய், மக்களுக்குப் பயன்படுமாறு செய்ய முடியுமா என்பதையே ஆராய்ச்சி செய்யத் தொடங்குவார்களாம்.

இந்தத் தகவல், டில்லி மாநிலங்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படுமாம்!

பெங்களூர், ஆக. 31—

புதிய மைசூர்மாநிலம் 4 நிர்வாக பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு தனிக் கமிஷனர் நியமிக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சங்கரன்கோவிலில் என். வி. நடராசன்

16-8-56-ல், சங்கரன்கோவில் வட்டம் சிவகிரிபாலவிநாயகர் உயர்நிலைப்பள்ளி மாணவர் கழக விழாவில் கலந்து சொற்பொழிவாற்றிய பிறகு, இரவு 9 மணியளவில் சங்கரன்கோவில் நகர் தி. மு. கழக அழைப்பிற்கு இணங்கி துணைப் பொதுச்செயலாளர் அவர்கள் வருகைதந்து கழக ஊழியர்கள் பொதுத்தேர்தலில் நடந்துகொள்ள வேண்டிய முறைபற்றி விளக்கவுரையாற்றினார். பின்னர் கிளைக் கழகத் தோழர்களுடன் அமர்ந்து அவர் புகைப்படம் பிடித்துக்கொண்டார். 17—8—56 காலை 5 மணிக்கு தோழர்கள் டி. ஆர். எஸ்., என். சங்கரன், த. ராசேந்திரன் ஆகியோர் இரயில் நிலையம் சென்று வழியனுப்பினர்.

கடையநல்லூர் தி.மு.க.—மாணவர் கிளை அமைப்பு

27—8—56 மாலை 5 மணியளவில் கிழக்குபட நிலையத்தில் தோழர் பி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது செயலாளராக தோழர் ஏ. எம். அப்துல் அஜிதும், துணைச் செயலாளராகத் தோழர் ஜி. ராசமணியும், பொருளாளராகத் தோழர் டி. பி. இசக்கியும், செயற்குழுவினராகத் தோழர்கள் எம். எஸ். நிறைமதி, டி. அய்யம்பெருமாள், எம். உதுமான் முகைதீன், கே. சங்கர், ஓ. கே. செய்யது மசூது, எஸ். இராசன், பி. வண்ணமுத்து, ஏ. காசாமுகைதீன், கே. பால்ராஜ், எம். எம். இப்ராகிம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கூட்டத்தில், இயற்கையெய்திய தோழர் எம். கே. அபுசாலிக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மதுரைநகர தி.மு.கழக—மாணவர் கிளை அமைப்பு

26—8—56-ல், மேற்படி கிளைக் கழகச் சார்பில், தோழர் அ. சுந்தரராசன் தலைமையில் கழகக் கட்டிடத்தில் நடைபெற்றது. அதுபோது புதிய கழக உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். பின்னர் புதிய நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: இரா. பிச்சை; துணைச் செயலாளர்கள்: இரா. கோபாலன், சு. சுந்தரம்; பொருளாளர்: அ. சுந்தரராசன். அக்டோபர் இரண்டாவது வாரத்தில் கிளைத் துவக்க விழா நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

காங்கிரஸ் கட்சிக்கு ‘யோகம்’ அடிக்கிறது?

டாடா கம்பெனி அரசியல் கட்சிகட்கு பண உதவி செய்யப்போகிறதாம்!

பம்பாய், ஆக. 30—

காங்கிரஸ் கட்சிக்கு யோகம் அடிக்கிறது!

டாடா இரும்பு உருக்குத் தொழில் நிறுவனத்தார் அரசியல் கட்சிகளுக்கு — பொதுவாக தொழிற்சாலைகளின் நலன்களுக்கும்—குறிப்பாக இரும்பு உருக்குத் தொழில் நலன்களுக்கும் பாடுபடக்கூடிய அரசியல் கட்சிகளுக்குப் பணஉதவி செய்வது என்று முடிவு செய்திருக்கிறார்களாம்.

இந்த ஏற்பாட்டினை, கம்பெனியின் பங்குதாரர்களில் ஒரே ஒருவர் தான் எதிர்த்தாராம்!

கம்பெனிச் சட்டத்திற்கு உட்பட்டதுதான் இந்த ஏற்பாடு என்றும், இங்கிலாந்தில்கூட தனியார் தொழில் நிர்வாகிகள் அரசியல் கட்சிகளுக்குப் பணம் தருவதாகவும் கம்பெனி முதலாளியான டாடா சமாதானம் கூறினாராம்!

கம்பெனி டைரெக்டர்களுடைய அரசியல் விருப்பங்களுக்கொப்பப் பணம் தரப்படமாட்டாது என்றும், கம்பெனியின் நலனை உத்தேசித்தே பண உதவி தரப்படும் என்றும் டாடா உறுதி மொழி தந்தாராம்!

டாடா கம்பெனி, காங்கிரசல்லாத வேறெந்தக் கட்சியினரைத் தங்கள் தொழில் வளர்ச்சிக்குப் பாடுபடுபவர்கள் என்று கொள்ளப் போகின்றனர்?

ஒன்றுபட்டுவிட்டால்......!

சீனப் பிரதமர் தரும் விளக்கம்

பீக்கிங், ஆக. 31—

“மலேயா, சிங்கப்பூர் ஆகிய இரண்டு நாட்டிலும் வாழ்ந்து வரும் பல்வேறு இனத்தவர்களும் ஒன்றுபட்டுவிட்டால், காமன்வெல்த்திற்குள் சுதந்திர அரசாங்கங்களாகப் பிரிட்டன் அவற்றை அங்கீகரிக்கும்”

என்று சீனப் பிரதமர் சௌ-என்-லாய் கூறியிருக்கிறாராம்.

அவை தங்களுக்குள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்வதாக இருந்தால் பிரிட்டன் ‘பிரித்தாளும் கொள்கை’யை மேற்கொள்ளும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

உருக்குத் தொழிற்சாலை இயந்திர சாதனங்கள்

இந்தியாவில் தயாரிக்க ரஷ்ய நிபுணர்கள் திட்டம்?

புதுடில்லி, ஆக. 30—

‘கனரக இயந்திர சாதனங்கள் தயாரிப்பு சம்பந்தமாக இப்போது இந்தியாவுக்கு வந்துள்ள ரஷ்ய நிபுணர்கள் சமர்ப்பிக்கும் அறிக்கையில் உருக்குத் தொழிற்சாலை இயந்திர சாதனங்கள் தயாரிப்புத் திட்டமும் நிச்சயம் அடங்கியிருக்கும்’ என்று உபயோகப் பொருள் உற்பத்தித் தொழில் மந்திரி, மாநிலங்கள் சபையில் தெரிவித்தார்.

அந்த அறிக்கையில், வேறெந்த ரக இயந்திர சாதனத் தயாரிப்புத் திட்டங்கள் அடங்கியிருக்கும் என்று தற்சமயம் சொல்வது சாத்தியமில்லை என்றும், ரஷ்ய நிபுணர்கள் குழு, தன்னுடைய சிபாரிசுகளை இன்னும் சர்க்காருக்குச் சமர்ப்பிக்கவில்லை என்றும் அவர் சொன்னார்.

டில்லி செங்கோட்டை அகதியின் சொத்தாம்!

இந்தியாவில் விட்டுச் சென்ற தனது சொத்துக்களுக்கு ரூ. 70 கோடி நஷ்டயீடு கிடைக்கவேண்டுமென்று பாகிஸ்தானிலுள்ள ஒரு அகதி உரிமை கொண்டாடியிருக்கிறாராம்! அவரது உரிமைக் கோரிக்கையை இந்திய சர்க்கார் பரிசீலனை செய்து வருகிறதாம்!

‘டில்லி செங்கோட்டை’யும் அந்த அகதி உரிமை கொண்டாடும் சொத்துக்களில் உட்படுத்தப்பட்டிருக்கிறதாம்!

மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழுக் கூட்டம்

12—8—56 காலை 10 மணியளவில் மதுரை தல்லாகுளம் அழகர் கோவில் ரோடு பெருமாள் மண்டபத்தில் தோழர் எஸ். முத்து தலைமையில் நடைபெற்ற மதுரை மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் இரண்டாவது மாநில மாநாட்டுத் தீர்மானங்களை வரவேற்றும், பொதுத் தேர்தலுக்குத் தலைமைக் கழகம் இடும் கட்டளைக்கு உட்பட்டுக் கிளைக் கழகங்கள் மூலம் தேர்தல் நிதி திரட்டுவதென்றும், பொதுத் தேர்தலில் தனிப்பட்ட முறையிலோ கழகச் சார்பிலோ தலைமைக் கழக அனுமதி இல்லாமல் யாருக்கும் வாக்குறுதி அளிக்க வேண்டாம் எனக் கிளைக் கழகங்களைக் கேட்டுக்கொண்டும், குஜராத் படுகொலையைக் கண்டித்தும், அடக்குமுறைக்கு ஆளானோருக்கு அனுதாபம் தெரிவித்தும், சூயஸ் கால்வாயைத் தேசிய மயமாக்கிய நாசரைப் பாராட்டியும், பிரிட்டிஷாரின் ஆதிக்கவெறியைக் கண்டித்தும், இலங்கை சர்க்காரின் அநீதியைக் கண்டித்தும், இலங்கைத் தமிழர் போராட்டத்தில் உயிர் துறந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், உடனடியாக மத்திய—மாநில அரசினர் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தலையிட்டு நல்ல முடிவு காண வேண்டியும், காமயக்கவுண்டன்பட்டி கிராமத்தில் சர்க்கார் நிலத்தில் ஏழைகள் வீடு கட்டிக்கொள்ள மதுரை மாவட்டக் கலெக்டர் அனுமதித்திருந்தும் அந்த நிலத்தை ஆக்கிரமித்துக்கொள்ள முயலும் காங்கிரசாரைக் கண்டித்தும், அந்நிலத்தை ஏழை மக்களுக்கே கொடுக்க உத்தரவிட மதுரை மாவட்டக் கலெக்டரை வேண்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருச்சி தி. மு. கழக—மாணவர் கிளை

திருச்சி தி. மு. கழக—மாணவர் கிளைக் கூட்டம் 16—8—56 அன்று கூட்டப்பட்டது. ஒன்பதின்மர் அடங்கிய செயற் குழு அமைக்கப்பட்டது. தோழர்கள் இளங்கோ, அ.நடராசன், புதுமைப் பித்தன் ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கழகக் கொடியேற்று விழா

நெல்லை நகர், அழகிரி நிலையம் பாட்டபத்து அறிவு ஆராய்ச்சி இயக்க நாடக மன்றத்தின் சார்பில் கடந்த 19-ந் தேதியன்றுமாலை தெருவில் ஊர்வலம் வந்து தி. மு. கழகக் கொடி ஏற்றிவைக்கப்பட்டது. தோழர் முதலிறைவன் சிறுவருக்குத் தின்பண்டங்கள் வழங்கினார்.

பெயர் சூட்டல்

குளைத் தோழர் கே. ஆறுமுகம் அவர்களின் பெண் குழந்தைக்குப் ‘பூங்கோதை’ என்று பெயரிட்டதின் நினைவாக ‘நம் நாடு’ இதழுக்கு நன்கொடை ரூ. 2 அளிக்கப்பட்டது.

அரக்கோணம் விமான நிலைய நீர் வினியோகச் சாதனங்கள்

நகர மக்களுக்குக் கடனாகத் தர டில்லி சம்மதம்

சென்னை, ஆக. 31—

அரக்கோணம் விமான நிலையத்தில் உள்ள தண்ணீர் விநியோகச் சாதனங்களை அரக்கோணம் நகராண்மைக் கழகத்திற்குக் கடனாகத் தந்து உதவ தற்காப்பு இலாகா சம்மதித்துவிட்டதாம்.

தேவை என்று கேட்கும்போது நஷ்டஈடு எதும் கோராமல் இரண்டு வார அவகாசத்திற்குள் திரும்பவும் தற்காப்பு இலாகாவிற்குத் தந்துவிட வேண்டும் என்பதுடன், சாதனங்களை முறையாகக் கெட்டுப்போகாமல் உபயோகித்துக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் தற்காப்பு இலாகா உதவுகிறதாம்.

அரக்கோணம் பஞ்சாயத்து அதிகாரியுடன் இது குறித்து இன்னும் கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருவதாகத் தகவல் தந்த சென்னை சுகாதார அமைச்சர் மேல் சபைக் கேள்விக்குப் பதிலளிக்கும்போது கூறியிருக்கிறார்.

சாத்தனூர் பாசனத்திட்டம்

ஆயிரம் ஏக்கருக்குத் தண்ணீர் கிடைக்கும்

சென்னை, ஆக. 30—

வடஆற்காடு மாவட்டத்திலுள்ள சாத்தனூர் பாசனத் திட்டத்திலிருந்து, வருகிற அக்டோபர் திங்கள் இரண்டாந் தேதியன்று—அதாவது காந்தியார் பிறந்த நாளன்று 1,000 ஏகர் நிலத்திற்குப் பாசனம் அளிக்கக்கூடிய அளவிற்குத் தண்ணீர் விடப்படும் என்று கூறப்படுகிறது.

தேசீயம் பேசுவோர் பற்றி அண்ணு

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

எண்ணம் மராட்டியருக்கு வரவில்லை; சாதாரண மராட்டிய னுக்கு மட்டும் வரவில்லை என்பதல்ல—தேஷ்முக், காட்கில் போன்ற பெருந் தலைகளுக்கே வரவில்லை!

"மராட்டியருடன் நாம் இணைந்து வாழ்ந்தால் என்ன கெட்டுவிடும்?—என்ற எண்ணம் குசராத்தியருக்கும் வரவில்லை; 'ஏன் வரவில்லை?' என்று நாம் கேட்கிறோம்.

"'பாரதம் ஒரே நாடு' என்று பேசுகிறவர்கள் பதில் சொல்லுவார்களா? 'சர்வ தேசீயம்' பேசுபவர்கள் பதில் கூறுவார்களா?

"ஒரே 'பாரத தேசம்' என்ற எண்ணமும், 'எல்லோரும் இந்தியர்' என்ற பண்பும் இருந்தால், மண்ணுக்காக மராட்டிய னும் குசராத்தியும் அடித்துக்கொள்வானேன்?

"பம்பாய் மராட்டியருக்கு இல்லை என்றால், பம்பாய் நகருக்குள் மராட்டியர் நுழையவேகூடாது என்பதல்ல; எல்லா உரிமைகளும் மராட்டியருக்கு உண்டு; நிர்வாகம் மட்டும் டில்லியில் இருக்கும்'—என்றார்கள். ஏன் மராட்டியர்கள் ஏற்க வில்லை, அந்த ஏற்பாட்டை?

"இந்த நிலைக்குப் பெயர், 'பாரத தேசம்' என்பதா? எல் லோரும் 'இந்தியர்' என்பதா? இந்த இலட்சணத்தில், நம்மிடத் தில் வந்து 'சர்வதேசியம்' பேசுகிறார்கள் சிலர்!

"மலபாரில் உள்ள காடுகளில் சில மரங்களை வெட்டினார் களாம் சென்னை சர்க்கார்; 'மலபார் மலையாளிகளுக்கு என் றான பிறகு, அதில் மரம் வெட்டுவதா?'—என்று, ஏ. கே. கோபாலன் குமுறியிருக்கிறார். 'மலபார் காட்டு மரம் தமிழ ருக்கானலென்ன? மலையாளிகளுக்கானல் என்ன?' என்ற பெருநோக்குக்கொள்ள முடியாதவர்கள் சர்வதேசியம் பேசு கிறார்கள்!"

—என்று அண்ணா அவர்கள், சென்னை தேனாம்பேட்டையில் கடந்த 27—8—56ல் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"தேனாம்பேட்டை தமிழ் இளைஞர் கழகத்தவர் கழகத்தின் துவக்க விழா நாளின்போது, திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல்நிதிக்காக ரூ. 50 தந்திருக்கின்றனர்; அவர்களின் இந்த நிதி உதவிக்காகத் தி. மு. கழகச் சார்பில் நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.

"இதுபோன்ற விழா நாட்களில் மட்டுமின்றி சாதாரண நாட்களிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தவர் மட்டுமின்றித் தமிழ் இளைஞர் கழகம் போன்ற முற்போக்கு மன்றங்களும் அமைப்புகளும் 'தி. மு. க. தேர்தல் நிதிக்குப் பணம் திரட்டித் தரவேண்டும்' என்று கேட்டுக்கொள்கிறேன்.

"வரப்போகிற தேர்தல், ஒரு பயங்கரமான பலப் பரீட்சையாகும்

"இப்படி நான் ஏன் கூறுகிறேன்? 'பலர் பயம் காட்டுகிறார்கள்; அதனால் பயங்கரமானது,' என்றேன்; 'பல கட்சிகள் தேர்தலில் ஈடுபடுகின்றன—அதனால்தான் பலப் பரீட்சை' என்றேன்.

"கம்பங்கூழ் காய்ச்சிக் கொண்டிருக்கிறாள் ஒரு தாய்; கூடத்தில் தொட்டிலில் படுத்திருக்கிறது அவளது குழந்தை; அப்போது வீட்டுக்குள் சிறுத்தைப்புலி ஒன்று நுழைந்துவிட்டால் கூழ் காய்ச்சிக் கொண்டிருக்கும் தமிழ்த்தாய், 'வந்திருப்பது புலியாயிற்றே! அதற்குக் கூரிய நகங்களும், கொடிய கோரப் பற்களும் உண்டே!' என்று எண்ணி பயந்து, வாளாவிருந்துவிடுவதில்லை; தான் பெண் என்பதையும், வந்திருப்பது புலி என்பதையும் மறந்து ஓடோடியும் வந்து, தொட்டிலில் தூங்கும குழந்தையைத் தூக்கிக்கொள்வாள்; சிறுத்தைப்புலி பாய்ந்தாலும் அதனை எதிர்த்துப் போராடுவாள்—கையில் கிடைத்ததைக்கொண்டு!

"அதுபோலத்தான் நாம், ஜனநாயகம் என்ற குழந்தைக்கு ஆபத்து வந்திருப்பதால் ஓடோடிச் செல்கிறோம், குழந்தையைக் காப்பாற்ற!

"எனவே ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட மக்கள் எல்லாம் தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுவதைத் தங்கள் காரியமெனக் கருதி கழகத்திற்கு ஒத்துழைப்பைத் தரவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்.]

டில்லி சர்க்கார் நிராகரிப்பு

நாடு முழுமையிலுமுள்ள ஆலைத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்களின் ஊதியக் கட்டுக்கோப்பு பற்றிப் பரிசீலனை செய்து, அவர்களுக்குப் போதுமான ஊதியம் கொடுக்கச் சிபாரிசு செய்வதற்காக உடனடியாக ஒரு ஊதியக் குழு நியமிக்கப்படவேண்டும் எனக்கோரும் தனி உறுப்பினர் தீர்மானம் ஒன்று டில்லி மாநிலங்கள் சபையில் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

கழகக் கூட்டங்கள்

★

குடியேற்றம் : (வ. ஆ.)
ஆற்றுத் திடலில்
2—9—56 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
அண்ணு
என். வி. நடராசன்

★

இலுப்பூர் :
சின்னக்கடை வீதியில்
தி. மு. கழகத் துவக்க விழா
4—9—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : எல். எஸ். எல். மணன்
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
அம்பில் தர்மலிங்கம்
எம். எஸ். மணி
எஸ். ஏ. ஜி. ராபி

★

பனமடல் :
தி. மு. கழகத் துவக்கவிழா
4—9—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : ஏ. ஆனைமுத்து
கொடியேற்றுபவர் :
எம். பி. சுப்பிரமணியம் M.L.A.
பேசுபவர் :
சிற்றுளி-சுப்பிரமணியம்

இரயில்வே ஊழியருக்கு

ரூ. 5 அடிப்படைச் சம்பள உயர்வு

புதுடெல்லி, ஆக. 31—
வேறெல்லா டெல்லி சர்க்கார் ஊழியர்களையும் போலவே இரயில்வே இலாகா ஊழியர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்தில் ரூ. 5 உயர்த்தப்பட்டிருக்கிறது.

சம்பள உயர்வு ஆகஸ்டு திங்கள் முதலே கிடைக்குமாம்.

இப்போது ரூ 55 அடிப்படைச் சம்பளம் வாங்கும் அனைவரும் ரூ. 60 சம்பளம் பெறுவர் என்று தெரியவருகிறது.

துணி வரி அதிகரிக்கப்படுகிறது!

ரூ. 17·5 கோடி உபரி வருமானம் கிடைக்குமாம்

புதுடில்லி, ஆக. 31—
ஆலைத் துணிக்கு விதிக்கப்படும் வரி அதிகரிக்கப்படுகிறது.

இதற்கான மசோதா ஒன்றை மக்கள் சபையில், மந்திரி கிருஷ்ணமாச்சாரி கொண்டுவந்திருக்கிறார்

இந்த வரி அதிகரிப்பின் மூலம் எஞ்சியுள்ள நிதி ஆண்டில் ரூ. 17·5 கோடிவரை உபரி வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இந்த வரி விதிப்பு ஆக. 31-ந் தேதி இரவு முதல் அமுலுக்கு வந்திருக்கிறதாம்.

ஒரு சதுர கெசம் 'சூபர் பைன்' என்ற மிக உயர்ந்த ரகத் துணிக்கு விதிக்கப்பட்டுவந்த $2\frac{1}{2}$ அணா வரி 4 அணுவாகவும், அடுத்த உயர்ந்த ரகத் துணிக்கு விதிக்கப்பட்ட $1\frac{3}{4}$ அணு 3 அணுவாகவும், நடுத்தரத் துணிக்கு ஒரு அணுவாக இருந்தது இரண்டணுவாகவும், மட்ட ரகத் துணிக்கு ஒரு அணுவாக இருந்தது ஒன்றரை அணுவாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவிலுள்ள வெள்ளையர்களுக்கான பள்ளிகளில் நீக்ரோ குடிமக்கள் அனுமதிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்காவின் தென்மாநிலங்களில் வெள்ளையர்கள் ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகளை மேற்கொண்டதின் விளைவாக அங்கு, மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

★★★★★★★★★★★★★★-★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட நாடு விடுதலை (பிரிவினை) வாரம் கொண்டாடுவீர்!

★

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க நாளான 17—9—56-ஆம் நாளிலிருந்து 23—9—56-ஆம் நாள்வரை

திராவிடநாடு விடுதலை (பிரிவினை) வாரமாகக்

கொண்டாடும்படி ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளையும், கழகச் சார்புள்ள அமைப்புகளையும் அன்போடு விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், இலவச இசை நாடக அரங்குகள் ஆகியவற்றைச் சிறப்போடும் பொலிவோடும் நடத்திக் கருத்து விளக்கம் செய்யுமாறு மகிழ்ச்சியோடு கேட்டுக் கொள்கிறேன.

'அறிவகம்'
சென்னை-13
1—9—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தேர்தல் நிதி சிறப்புக் கூட்டம்

8—9—56 சனி மாலை 6-மணி

கோகலே மண்டபம்

★

தலைவர் :

கே. ஏ. மதியழகன்

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள்

'இலக்கிய இன்பம்'

என்னும் பொருள்பற்றிப் பேசுவார்.

★

நன்கொடை : ரூ. 1; அணு 8, 4.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சென்னை மாவட்ட அவசரச் செயற்குழு

2—9—56 ஞாயிறு பிற்பகல் 2-மணிக்கு, சென்னை—இராயபுரம் 'அறிவக'த்தில், சென்னை மாவட்ட அவசரச் செயற்குழு கூட்டப்பட இருப்பதால் பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் வருகை தருமாறு கோரப்படுகிறார்கள்.

சொற்பயிற்சிக் கூட்டம்

2—9—56 காலை 9-மணிக்கு, சென்னை—பெத்துநாய்க்கன் பேட்டை மக்கள் மன்றச் சார்பில், எண் 17, திருப்பள்ளித் தெரு மன்ற அலுவலகத்தில், 'நாட்டுப் பிரிவினை வேண்டுமா — வேண்டாமா?' என்ற தலைப்பில், தோழர்கள் பலர் பேசுவர்.

தூளை நகர இளைஞர் கழகம்

2—9—56 காலை 8-மணிக்கு. திரு ஏ. கே. கலியாணராமன் தலைமையில் சுகாதாரப் பிரச்சாரமும் இலவச பால் வினியோகமும், தூளை கலியாண மேஸ்திரி தோட்டத்தில் நடைபெறும்.

சென்னைக் கல்விச் சங்கம்

2—9—56 மாலை 5-மணிக்கு, பட்டாளம், ஸ்ட்ராஹன்ஸ் ரோட்; ஆண்பள்ளியில் 'ஈகையும் இரவலரும்' எனும் தலைப்பில், திரு த. வே. முருகேசனார் தலைமையில், திரு. க. வீ. வரதன், திரு. க. வீ. குருசாமி சொற்பொழிவாற்றுவர்.

சொற்போர்க் கூட்டம்

2—9—56 காலை 10 மணிக்கு: சென்னை—இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில், பனைமரத்தொட்டி அட்டாளையம் பசனைக்கோவிலில் திரு அ. முனுசாமி தலைமையில், 'நாணயம்'—வாழ்க்கைக்குப் பயன்படுமா?' என்ற தலைப்பில், திரு கு. பெ. துரைசாமி ஒட்டியும், திரு ம. செல்வராசன் வெட்டியும் சொற்போர் நிகழ்த்துவார்கள்; மற்றும் பலரும் பங்கேற்பர். மன்ற வளர்ச்சிக்கான ஆலோசனைக் குழுவின் கூட்டமும் நடைபெறும்.

தொழில் துறையில்....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

எங்கு உதவி அதிகமாகத் தேவைப்படுகிறதோ அங்கு உதவி செய்வது என்ற சோவியத் குறிக்கோளின் உள்ளடக்கமாகும் இவ்வுதவி என சொல்லப்படுகிறது.

தொழில் துறையில் தென் பகுதி பின்தங்கிக் கிடப்பதாகவும், அதன் பலனுகத் தங்கள் உதவியில் தென் பகுதிக்கே உயர்ந்த முதலிடம் தரப்பட வேண்டும் எனவும் இரஷ்யர்கள் உணர்ந்திருப்பதாகத் தெரியவருகிறது.

'மெயில்': 21—1—56

வெளிவருகிறது—17-9-56 முதல்!

கலைக்கூடம்

(சீர்திருத்த — மாதமிருமுறை ஏடு)

★

ஆசிரியர் : கலைஅரசு
தனி இதழ்: 2 அணு.
பிறப்பிடம் : சிவகங்கை (R.D.)

எழுத்தாளர்களும், இதழ் விற்பனையாளர்களும் தொடர்பு கொள்க.

★-★★★★★★★★-★★★★★★★★★

பிரச்சாரக் கூட்டம்

2—9—56 மாலை 6-மணிக்கு, சென்னை 16-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், அண்ணுபிள்ளை தெருவில் (கார்ப்பொரேஷன் ஒர்க் ஷாப் எதிரில்), தோழர் ப. து. சம்பத் அவர்கள் தலைமையில், 'ஐந்தாண்டுத் திட்டமும்—தென்னுடும்' என்பதுபற்றிப் பிரச்சாரக் கூட்டம் நடைபெறும்; தோழர்கள் வ. பா. சின்னையா, பத்மநாபன், ப. ஆசைமுத்து, ஆண்டவன் ஆகியோர் பேசுவர்; தோழர் ஏ. வேதரத்தினம் அவர்களும் கூட்டத்தில் கலந்து கொள்ளுவார்.

சென்னை — தாய்மார் கழகம்

2—9—56 பிற்பகல் 3-30 மணிக்கு, சென்னை, 135, அண்ணுபிள்ளைத்தெரு, பிரம்மசமாஜப் பள்ளியில், தோழியர் எஸ். கிருஷ்ணவேணியம்மையார் தலைமையில், திருக்குறள் பொருட்பால் அரசியல் நிறைவு விழா நடைபெறும். பேராசிரியர் மயிலை-சிவ. முத்து அவர்கள் குறள்பாடம் நிறைவேற்றி வைப்பார். திரு. எஸ். எஸ் அருணகிரிநாதர் குழந்தைகட்குப் பரிசுகள் வழங்குவார். தோழியர் வ. பா. தாமரைக்கண்ணியார், ஜெ. கலைச்செல்வியார், மு. பார்வதியம்மையார், ஹெலன் ஜாய்ஸ், கே. வி. சண்பகம், தெரிசா கமலம், பி. வி. பரமேஸ்வரி, வெற்றி மகள், ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். தாய்மார் கழகக் குழந்தைகள், சண்முகானந்த சங்கீதக் கைத்தொழில் கல்விச்சாலைக் குழந்தைகளின் ஆடல்பாடல்களும் நடைபெறும்.

நகரச் சிறுவர் சங்கம்

2—9—56 மாலை 3-மணிக்கு தூளை, டிமலஸ் ரோடிலுள்ள கேசவப்பிள்ளை பூங்காவில், திரு. ஜி. செல்வபதி செட்டியார் தலைமையில், 'சிறுவர் விளையாட்டு தினம்' கொண்டாடப்படும். திரு பி. பிரகாசம் அவர்கள் சிறுவர்களுக்குப் பல புதிய விளையாட்டுக்களைக் கற்றுக் கொடுப்பார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.